பிரசார்பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

*20 09 2026* *SUNDAY 6 30 PM*

<u>வணக்கம் - மாநிலச்செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1) பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளை தடுப்பதற்கு சர்வதேச ஒத்துழைப்பு அவசியம் என்று குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

2) சென்னை, பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச்செயலகம் கட்டும் முடிவினை த.வெ.க. அரசு கைவிட வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

3) தமிழகத்தில் டெங்கு காய்ச்சல் பரவல் கட்டுக்குள் உள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

4) அந்தமான் கடல்பகுதியில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி வலுவடைந்து வருவதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5) ஆசிய விளையாட்டு மகளிர் கிரிக்கெட் போட்டியில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறி, பதக்கத்தை உறுதி செய்துள்ளது.

>>>>><<<<<

பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளை தடுப்பதற்கு சர்வதேச ஒத்துழைப்பு அவசியம் என்று குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் சுற்றுச் சூழல் தொடர்பான சர்வதேச உச்சிமாநாட்டில் நிறைவுரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சுற்றுச்சூழல் பாதிப்புகளை தடுப்பதற்கு மத்திய அரசு உறுதியுடன் செயல்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இயற்கையை பாதுகாப்பது நமது பாரம்பரியத்தின் அங்கமாக உள்ளது என்றும் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்தார்.

>>>>><<<<<

சென்னை, பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச்செயலகம் கட்டும் முடிவினை த.வெ.க. அரசு கைவிட வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

இன்று வேலூரில் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

(சவுண்ட் பைட் (1) எல்.முருகன் 31 செகண்ட்ஸ்)

டெங்கு காய்ச்சல் பரவலை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகளை த.வெ.க. அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் டாக்டர் எல். முருகன் கேட்டுக் கொண்டார்.

(சவுண்ட் பைட் (2) எல்.முருகன் 21 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

தமிழகத்தில் டெங்கு காய்ச்சல் பரவல் கட்டுக்குள் உள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

(சவுண்ட் பைட் அருண்ராஜ் 52 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

தமிழகத்தில் த.வெ.க. அரசு பொறுப்பேற்ற பின்னர் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக திமுக குற்றம் சாட்டியுள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சி சமூகவலைதளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில், 24 மணிநேரத்தில் 8 கொலைச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

சட்டம் ஒழுங்கை பாதுகாக்க முதலமைச்சர் திரு. விஜய் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் திமுக கோரியுள்ளது.

>>>>><<<<<

மக்கள் அன்றாடம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண தவெக அரசு தவறிவிட்டதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

சேலம் மாவட்டம், மின்னாம்பள்ளியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மின்வெட்டு, ஆவின் பால் பற்றாக்குறை போன்ற பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வு காண வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

சட்டம் ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படவில்லை என்றும் அவர் குறை கூறினார்.

இப்பிரச்சினைகளுக்கு தீர்வு கண்ட பின்னர் புதிய தலைமைச்செயலகம் கட்டுவது குறித்து த.வெ.க. அரசு முடிவெடுக்க வேண்டும் என்றும் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

>>>>><<<<<

அந்தமான் கடல்பகுதியில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி வலுவடைந்து வருவதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி.ஆர். துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(Sound Byte - வி.ஆர். துரை - 64 Sec. )*

>>>>><<<<<

விநாயகர் சதுர்த்தியை ஒட்டி, சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் வைக்கப்பட்ட சிலைகள் பலத்த பாதுகாப்புக்கிடையே அரசு அறிவித்துள்ள கடல் பகுதிகளில் கரைக்கப்பட்டன.

இதேபோல் மாநிலம் முழுவதும் விநாயகர் சிலைகள் நீர்நிலைகளில் கரைக்கப்பட்டன.

இதற்கிடையே, நாமக்கல் மாவட்டம், குமாரபாளையத்தில் விநாயகர் சதுர்த்தியை ஒட்டி, இன்று குதிரை வண்டி ரேக்ளா பந்தயம் நடைபெற்றது.

இதில் 200-க்கும் மேற்பட்ட குதிரைகள் பங்கேற்றதாக எமது செய்தியாளர் கண்ணன் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - கண்ணன் 38 செகண்ட்ஸ்)*

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

உடல் உறுப்பு தான விழிப்புணர்வு பேரணி காஞ்சிபுரத்தில் இன்று நடைபெற்றது.

>>>>><<<<<

தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் - பென்னாகரம் சாலையில் மலை காரணமாக மரம் விழுந்ததால், அந்த வழித்தடத்தில் 3 மணிநேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

>>>>><<<<<

திண்டுக்கல், பழநி மலைக்கோவில் ரோப் கார் பராமரிப்புப் பணிகள் நிறைவடைந்துள்ளதாகவும், 64 நாட்களுக்குப் பிறகு, நாளை மறுநாள் முதல் இதன் சேவை தொடங்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் அருகே போதைப்பொருள் வைத்திருந்தது தொடர்பாக 3 பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய விளையாட்டு மகளிர் கிரிக்கெட் போட்டியில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறி, பதக்கத்தை உறுதி செய்துள்ளது.

ஜப்பானில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா 114 ரன் வித்தியாசத்தில் பங்களாதேஷை வென்றது.

இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 195 ரன் எடுத்தது.

Shafali Varma அதிரடியாக ஆடி, 49 பந்துகளில் 100 ரன் குவித்தார்.

196 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பின்னர் பேட் செய்த பங்களாதேஷ், 15 புள்ளி 3 ஓவரில் 81 ரன் மட்டுமே எடுத்து ஆட்டமிழந்தது.

Deepti Sharma மற்றும் Nandini Sharma அபாரமாக பந்துவீசி தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இப்போட்டியில் தங்கப்பதக்கத்திற்கான ஆட்டத்தில் இந்தியா – இலங்கையை எதிர்கொள்கிறது.

ஆடவர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா 13-1 என்ற கோல்கணக்கில் இந்தோனேஷியாவை வென்றது.

மகளிர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியா காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆசிய விளையாட்டுப் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்ற இளவேனில் வாலறிவன் மற்றும் மகளிர் குழுப் பிரிவினருக்கு குடியரசுத்தலைவர், பிரதமர், மத்திய அமைச்சர்கள் மற்றும் தலைவர்கள் பலர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

>>>>><<<<<